# 8

## வெற்றிகரமான திருமணத்திற்கான வழிவகை ...

# பாலுறவு பிரச்சனைகளை சரிசெய்தல்

மணவாழ்வில் பாலுறவுப் பிரச்சனைகள் உண்டு என்பதை எவரும் சொல்லி உணர்த்த வேண்டியதில்லை. திருமணமான பெரும்பான்மையான தம்பதியர் எல்லாருமே காலாகாலமாக ஏதாவது ஒரு தரத்தில் பாலுறவு பிரச்சனைகளை அனுபவித்திருக்கின்றனர். தங்களது வாழ்க்கையின் இந்த விஷயம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை, தம்பதியர் - ஏன், கிறிஸ்தவ தம்பதியரும்கூட - தீர்த்துக்கொள்ள இயலாமற் போவதால் அநேக திருமணங்கள் தோல்வியடைகின்றன.

இத்தகைய பிரச்சனைகளை சரிசெய்வது எப்படி? நீங்கள் திருமணம் செய்து கொள்ளும்போது, உங்கள் மணவாழ்வின் பாலுறவு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை நீங்கள் எவ்விதம் தவிர்க்கலாம் அல்லது அவை எழும்போது எவ்விதம் சரிசெய்திடலாம்?

அந்தக் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில், சமூக அறிவியலாளர்கள், மனோதத்துவ நிபுணர்கள், திருமண ஆலோசகர்கள் அல்லது குடும்ப வல்லுநர்கள் தங்கள் ஆய்வில் கண்டறிந்தவைகளை உங்கள் முன்வைப்பது இந்தப் பாடத்தின் முக்கிய நோக்கம் அல்ல. மாறக, பாலுறவு பற்றி வேதம் என்ன சொல்லுகிற தென்பதையும் மணவாழ்வில் வரவிருக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அதன் போதனைகள் எவ்விதம் உதவிகரமாயிருக்கும் என்பதின் விளக்கத்தையும் உங்கள் முன்வைப்பதுவே இந்தப் பாடத்தின் நோக்கமாயிருக்கிறது. வேதம் பாலுறவு பற்றி போதிப்பது என்ன?

## பாலுறவு இயல்பானது மற்றும் நன்மையானது என்பதை நாம் உணரவேண்டும்

முதலாவதாக வேதாகமம் பாலுறவுவினை நன்மையானதாகக் காட்டுகிறது. அது இயல்பானது: உண்ணுதல், உறங்குதல் ஆகியவை இயல்பான மனுஷ செயல்பாடுகளாயிருப்பதைப் போலவே, ஒருவர் தமது வாழ்க்கைத் துணையுடன் பாலுறவு கொள்ளுதலும் மனுஷனாயிருப்பதின் ஓர் அங்கம்தான். வாழ்க்கையின் இயல்பானதோர் அம்சமாக பாலுறவை நாம் கையாளவேண்டுமென்ற புரிந்து கொள்ளுதலை வேதம் அறிவுறுத்துகிறது. உரிய சந்தர்ப்பத்தில் வேதாகமம் பாலுறவைப்பற்றி கூச்சமின்றியும், நிதர்சனமாகவும் பேசுகிறது.

இருப்பினும், பாலுறவென்பது இயல்பானது என்ற கருத்தை மட்டும் வேதாகமம் சொல்லாமல், அது நன்மையான ஒன்று என்பதையும் எடுத்துரைக்கிறது. மனுஷனை தேவன் உண்டாக்கிய போது அனைத்தும் “மிகவும் நன்றாய்” இருப்பதாக மொழிந்தார் (ஆதியாகமம் 1:31), அது மனுஷனுடைய

பாலுறவுப் பகுதியையும் சேர்த்துதான்.

தேவன், "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல" என்றார் (ஆதியாகமம் 2:18அ). "ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" (ஆதியாகமம் 2:18ஆ) என்று பெண்ணை உருவாக்குகையில் அவர், பாலினத்தால் மாறுபட்டதாகவும், ஆணின் அவசியங்களை திருப்திபடுத்துவதற்கு இசைவாய்ப் பொருந்துகின்றதாகவும் இருக்கிற ஒருத்தியை உருவாக்கினார். மனுஷன் தனிமையாயிருப்பது "நல்லதல்ல" என்றால் மனுஷன் பெண்ணோடு சேர்ந்திருப்பது *நல்லது* - அவளோடு மணவாழ்வில் இணைந்திருந்து, பாலுறவில் அவளோடு ஒன்றாகி விடுவது நல்லது. அவரது படைப்பினை இயேசு பின்னோக்கிப் பார்த்துச் சொன்னார்: "அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (மத்தேயு 19:5ஆ). மணவாழ்க்கைக்கும், மணவாழ்விற்குட்பட்ட பாலுறவிற்கும் தேவகுமாரனின் அங்கீகாரம் உண்டு. எனவே இது இயல்பானது மட்டுமல்ல, உண்மையிலேயே நன்மையானதாகவும் இருக்கிறது.

பாலுறவென்பது உண்மையிலேயே நன்மையானதாக இருக்கிறதென்ற எண்ணம் சில சமயங்களில் மறந்து போகிறது. சிலநேரங்களில் கிறிஸ்தவர்கள், பாலுறவென்பது அசுத்தமானது, தீட்டானது அல்லது அசிங்கமானது என்ற எண்ணமுடையவர்களாயிருக்கிறார்கள். சிலர் குறிப்பாக, அதனை, ஓர் அத்தியாவசியமான தீமை எனக் கருதுகிறார்கள். அதாவது இது மனித இனத்தின் தொடர்ச்சிக்கு அவசியமானதுதான், ஆனால் அதில் சுகம் காண்பது பாவமாயிருக்கும் என்றார்கள். எங்கிருந்து அந்தக் கருத்து உதயமாயிருந்தாலும், அது வேதாகமத்திலிருந்து வந்ததல்ல; அது தேவனிடமிருந்து வந்ததல்ல.

கிறிஸ்தவர்களாகிய இளவயதினர் திருமணம் செய்து கொள்ளும்போது, இந்த பாலுறவுச் செய்கையென்பது மணவாழ்வில் இயல்பானதும் நன்மையானதுமாய் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளக் கஷ்டப்படுகிறார்கள். வேசித்தனத்திற்கு விலகியிருக்கவேண்டுமென்று வாழ்நாள் பூராவும் அவர்கள் போதிக்கப்பட்டிருக்கிறார்கள்; இந்நிலையில், முன்பு தவறானதாக இருந்த அதுவே தங்களுக்கு திருமணமான பிறகு முற்றிலும் சரியானதாக இருக்கிறதென்பதைப் புரிந்து கொள்வது அவர்களுக்கு கடினமாய் இருக்கலாம், தடைசெய்யப்பட்ட ஒன்று இப்போது அனுமதிக்கப்படுகிறது. திருமணத்திற்கான தேவனுடைய திட்டத்தை அவர்கள் நிறைவேற்ற வேண்டுமெனில் பாலுறவுப் பிணைப்பு மண வாழ்விற்குரியது என்பதையும், அது அந்தச் சூழ்நிலையில் இன்பமாய் அனுபவிக்க வேண்டியது என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

சாலொமோனின் உன்னதப்பாட்டு பாலுறவைப் புகழ்ந்து போற்றுகிறது. அதன் வாயிலாக, மனநிறைவான பாலுறவு பந்தத்திற்கு (அ) இருவருக்கிடையே உள்ள ஈர்ப்பு, (ஆ) ஒருவர் மற்றவரது வருகைக்காக ஏங்குதல், (இ) அன்பின் வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்ளுதல், (ஈ) அன்பின் செயல்கள்[1], ஆகியவைதான் காரணம் என்பதை உணர்த்துகிறது. வேதாகமம் பாலுறவிற்கான செய்முறைக் கையேடு அல்லவென்றாலும், நேசிக்கின்ற இருவர் தங்களது மணவாழ்விற்கு அத்தியாவசியமான நேசதாபத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு இந்த புத்தகத்திலுள்ள அன்பின் வார்த்தைகளை மிகச் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

# பாலுணர்வின் துஷ்பிரயோகத்தை நாம் தவிர்த்திட வேண்டும்

இரண்டாவதாக, பாலுணர்வு நாட்டத்தைக் தகாத முறையில் கையாளுவதால் பாவம் விளைகிறது என வேதாகமம் போதிக்கிறது. மனிதனுக்குள்ளிருக்கும் வேறு எந்த நாட்டமும், ஆசையும் போலவே[2] இந்தப் பாலுணர்வு தாகமும்கூட தவறாக கையாளப்படலாம். பாலுறவிற்கான நாட்டம் தவறானதல்ல; பாலுணர்வின் துஷ்பிரயோகமே தவறானதாகும்!

பாலுணர்வு தாகத்தின் முறைகேடுகளாகிய ஏராளமான பாலினப் பாவங்களைப் பழைய ஏற்பாடு கண்டிக்கிறது. விபச்சாரம், தகாப்புணர்ச்சி, ஒரினச்சேர்க்கை, மிருகத்துடன் புணர்தல்[3] ஆகியவை பாலினப் பாவங்களில் அடங்கியுள்ளன. அநேகமாக இவையனைத்துமே புதிய ஏற்பாட்டில், "ஒழுக்கக்கேடு" (NASB) அல்லது வேசித்தனம் (KJV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஃபோர்னியா எனும் கிரேக்க பதத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.[4]

குறிப்பாக, மணவாழ்வு நீடித்திருப்பதற்கு, கணவனும் மனைவியுமாகிய இருவருமே விபச்சாரம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். விபச்சாரம் மணவாழ்வை அழித்துவிடமுடியுமென்பது தெள்ளத்தெளிவாயிருக்கிறது. நீங்கள் திருமணம் செய்து கொள்ளும்போது "நீங்கள் இருவரும் உயிரோடிருக்கும் வரையிலும்" உங்கள் துணையாளிக்கு மட்டுமே "நீங்கள் உங்களை அர்ப்பணித்து" ஒருவருக்கொருவர் விசுவாசமாயிருப்போமென வாக்கு கொடுக்கிறீர்கள். வாழ்க்கைத் துணைவரில் ஒருவர் அந்த வாக்குறுதிக்கு உண்மையற்றவராகிப் போவதால் தான் திருமணங்கள் அடிக்கடி முறிந்து போகின்றன.[5]

விபச்சாரத்தைத் தவிர்ப்பது அவசியமாகையால், கணவனும் மனைவியுமாகிய இருவருமே, பின்வரும் முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

(1) *உங்களுக்கு சபலம் ஏற்பட வாய்ப்புள்ள சூழ்நிலைகளைத் தவிர்த்திடுங்கள்.* மாற்றுப் பாலினத்தைச் சார்ந்த ஒருவருடன் தனிமையிலிருப்பதைத் தவிர்த்திடுங்கள்; உங்களுக்கு பிடித்தமான ஒருவரோ அல்லது ஒருத்தியோ, எவ்வளவு அனுதாபமிக்கவராய்த் தோன்றினாலும் உங்களது தாம்பத்திய பிரச்சனைகளையோ அல்லது கவலைகளையோ அவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். யாரேனும் உங்கள்மீது தவறான ஆர்வம் காட்டினால் அந்த ஆளை விட்டு விலகுங்கள்.[6]

(2) *உங்களது வாழ்க்கைத் துணையிடம் பாலுறவுத் திருப்தி காண்பதில் கவனம்செலுத்துங்கள்.* நீங்கள் அவளை அல்லது அவரை விட்டு தூரமாய்ப்போயிருக்கும்போது, அடுத்த பாலுறவுச் சந்திப்பில் கிடைக்கப்போகும் இன்பசுகத்தைப் பற்றி சிந்தியுங்கள்.

(3) *பாலுறவில் உங்கள் வாழ்க்கைத் துணையைத் திருப்திப்படுத்தப்பாருங்கள்.* தாம்பத்திய உறவில் திருப்தி பெறுவது மட்டுமல்லாமல், திருப்தி அளிப்பதும் உங்கள் நோக்கமாயிருக்க வேண்டும். நீங்களிருவரும் சேர்ந்து நெருக்கமாயிருக்கும் வேளைகளில் அவளுக்கு அல்லது அவருக்கு அதிகப்படியான சுகம் கிடைப்பதற்கு நீங்கள் வழிவகை செய்யுங்கள்,[7] நீங்கள் கூடிவாழும் வாழ்க்கையென்பது, கற்றுக் கொள்வதற்கான ஓர் ஆய்வுக்கூடம் என எண்ணிக்கொள்ளுங்கள். அதில், காலம் செல்லச் செல்ல, உங்கள் தாம்பத்திய உறவினை மேம்படுத்திக் கொள்வது எப்படி

என்பதைக் கற்றுக் கொள்வீர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பாலுணர்வைத் திருப்தி செய்துகொள்ளுதலைப்பற்றி உலகத்தார் சிந்திப்பதை விட, கிறிஸ்தவர்கள் வேறுவிதமாய் சிந்திக்க வேண்டும். காதல் மன்னர்கள் என்று உலகத்தார் பேசிக்கொள்ளும் போது, பொதுவாக எண்ணற்ற துணைகளுடன் பாலியல் உறவு கொண்டிருந்த ஆண்களையே அவ்விதம் குறிப்பிடுவார்கள். ஆயினும், கிறிஸ்தவனைப் பொறுத்தவரையில், ஒருவரோடொருவர் மணவாழ்வில் நிலைத்திருந்து, நீடித்த வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாயிருந்து, ஒன்றாய் வாழக் கிடைத்த காலமெல்லாம் ஒருவர் மற்றவரது பாலுறவுத் தேவைகளை திருப்தி செய்வார்களேயானால், அவர்களே அன்பில் சிறந்தவர்கள்.

## ஒரு வாழ்க்கைத் துணையின் பாலுறவை நாம், ஒருபோதும் பறிக்கலாகாது

மூன்றாவதாக, வாழ்க்கைத் துணைகளில் எவருமே மற்றவரது பாலுறவின் உரிமைகளைப் பறிக்கலாகாது, என வேதாகமம் போதிக்கிறது. 1 கொரிந்தியர் 7:1-5ல் பவுல் இவ்வாறு எழுதினார்:

> நீங்கள் எனக்கு எழுதிய காரியங்களைக் குறித்து நான் எழுதுகிறதென்னவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது, ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும். புருஷன் தன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமையை செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்கு செய்யக் கடவள். மனைவியானவள் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரையொருவர் விட்டு பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு மறுபடியும் கூடிவாழுங்கள்.

மணவாழ்வில் பாலுறவுப் பிரச்சனைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு உதவிகரமாயிருக்கும் பல உண்மைகளை இந்த வசனப்பகுதி நமக்கு எடுத்துரைக்கிறது:

(1) *பாலுறவில், இனப்பெருக்கம் அல்லது இனவிருத்திக்கும் மேலானதோர் நோக்கமுண்டு என இது போதிக்கிறது.* ஆணுக்கும் பெண்ணுக்கும் பாலியல் தேவைகள் உண்டென்பதை இது ஒப்புக்கொள்ளுகிறது. பாலுறவின் முறைப்படியான ஒரே நோக்கம் இனவிருத்திதான் என்ற சிலரின் கருத்திற்கு இது முரண்பட்டதாயிருக்கிறது. மணவாழ்விலுள்ள பாலுறவு நெருக்கத்திற்கு பல நோக்கங்களுண்டு: பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்காக, ஒற்றுமையை உருவாக்க உதவிகரமாயிருப்பதற்காக (ஒன்றித்திருப்பதற்கான ஓர் அடையாளத்தை காப்பதற்காக), மற்றும் தேவைகளைத் திருப்திபடுத்துவதற்காக - உடல்

தேவைகளை மட்டுமல்லாமல் உள்ளத்தின் தேவைகளையும் கூட.

*(2) ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலாருக்குமே பாலியல் ஆசைகள் உண்டு என்று இது போதிக்கிறது.* சமீபகாலங்கள்வரை, ஆண்களுக்கு மட்டும்தான் பாலியல் ஆசைகள் இருக்கிறது அல்லது இருக்க வேண்டும் என்று கருதப்பட்டு வந்தது.

*(3) வாழ்க்கைத் துணை இருவரில் எவருமே மற்றவருக்கு பாலியல் உறவுகள் இல்லாமற்போகப் பண்ணலாகாது என்று இது போதிக்கிறது.* கணவனாயிருந்தாலும், அது மனையியாயிருந்தாலும், அவரவர்களுடைய சொந்த சரீரத்தின்மேல் அவர்களுக்கு அதிகாரமில்லை என்ற உண்மையின் அடிப்படையில் பவுல் இந்தக் குறிப்புகளை அளித்திருக்கிறார். பாலுறவினை ஒர் ஆயுதமாகப் பிரயோகிப்பதோ, அல்லது தண்டிப்பதற்காக பாலுறவை நிறுத்திக் கொள்ளுவதோ, ஆவியின் ஏவுதல் பெற்ற பவுல் அப்போஸ்தலனால் அனுமதிக்கப்படுவதில்லை.

*(4) விதிமுறைக்கு ஓர் விதிவிலக்கினை இது அளிக்கிறது.* கணவனும் மனைவியும் பாலுறவிலிருந்து ஒதுங்கியிருக்கலாமென்றும், அந்த விதி விலக்கிற்கான மூன்று நிபந்தனைகளையும் பவுல் குறிப்பிட்டிருக்கிறார். அந்த தம்பதியினர் அவ்வாறு ஒதுங்கியிருப்பதற்கு (அ) ஆவிக்குரிய காரணங்களிருக்க வேண்டும் ("ஜெபத்திற்கு தடையிராதபடிக்கு"), (ஆ) அதுவும் ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமாய் இருக்க வேண்டும் ("சில காலம்"), (இ) இருவருமே அதற்கு ஒத்துக் கொண்டிருக்க வேண்டும் ("இருவரும் ... சம்மதித்தாலன்றி"). இதிலிருந்து, திருமணமானவர்கள் பாலுறவின் நெருக்கத்தை தொடர்ச்சியாக அனுபவிக்க வேண்டுமென பவுல் எதிர்பார்க்கிறாரென்பது தெரிகிறது.

## திருமணமென்பது பாலுறவு மட்டுமல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்

நான்காவதாக, திருமணமென்றாலே பாலுறவு மட்டும் தான் என்றோ, அது தான் மிகமுக்கியமான அம்சம் என்றோ வேதாகமம் போதிப்பதில்லை. பாலுறவைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறதான சமூகத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். விளம்பரங்களிலும் பொழுதுபோக்கு நிகழ்ச்சியிலும் பாலுறவு வலிறுத்தப்படுகிறது. ஒரு சிறப்பான மணவாழ்க்கைக்கு சிறப்பான பாலுறவு வாழ்க்கை இருந்திட வேண்டுமென்பது போன்று பிரபலமான திருமண ஆலோசனை கூறுகிறது. அதாவது, படுக்கையறையில் குறிப்பிட்ட ஒரு தரத்திலான செயல்பாடு ஈடுகட்டப்படவில்லையெனில் திருமணமானது தோல்வியில் முடிந்து போகுமாம்.

வேதாகமம் இந்த நவீனக் கருத்தினை உறுதி செய்கிறதா? இல்லை! வேதாகமம், பாலுறவென்பது இயல்பானதென்றும் நன்மையானதென்றும் கூறுகிறதே ஒழிய பாலுறவுதான் திருமணத்தில் முக்கியமானதென்று எந்த இடத்திலும் போதிப்பதில்லை. பாலுறவைப் பொறுத்த வரையில் வேதாகமம் மௌனம் சாதிப்பதில்லை, அதே சமயத்தில் ஒரு "செய்முறை" புத்தகம் போன்று, பாலுறவிற்கான செயல்முறைக் கையேடாகவும் இருப்பதில்லை. வேதாகமத்தைப் பொறுத்தவரையில் மக்கள் மணவாழ்வில் மகிழ்வுடனிருப்பதற்கு பாலுறவில்தான் வெற்றிகாண வேண்டுமென்று கட்டாயமில்லை.

திருமணத்தில் பாலுறவுதான் எல்லாமும் அல்ல என்ற உண்மை வலியுறுத்தப் பட வேண்டும். பாலுறவு வாழ்வில் நன்றாயிருக்கும் ஓர் தம்பதியின் மணவாழ்க்கை மோசமாயிருக்கலாம் அல்லது நுட்ப அளவில் ஓர் சாதாரணமான பாலுறவு வாழ்க்கையுள்ளவர்களின் மணவாழ்க்கை சிறப்பாயிருக்கலாம். பாலுறவில் கைதேர்ச்சி பெற்றிருப்பது ஓர் இன்பமான மணவாழ்விற்கு உத்தரவாதமளிக்காது, அது போலவே, இன்பமான மணவாழ்வென்பது பாலுறவுத் தேர்ச்சியைச் சார்ந்திருப்பதில்லை. ஆகவே, பாலியல் நுணுக்கங்களில் கைதேர்ச்சி பெற்றிருப்பதைவிட, அன்பானவராக, புரிந்து கொள்பவராக, கனிவானவராக, தன்னலமற்றவராக, கொடுப்பவரும் பிழை பொறுப்பவருமாக, சுமப்பவரும் சகிப்பவருமாக இருப்பதுவே மிகவும் முக்கியமானது. ஒரு தம்பதியர் இந்த பண்புகளை வளர்த்துக்கொள்வார்களேயானால், அவர்களது மணவாழ்க்கை இன்பகரமாயிருக்கும்.

எனவே, திருமணத்தில் பாலுறவென்பது, ஒட்டு மொத்த விஷயங்களில் ஒன்றாக, ஒரு மூட்டைச் சாமான்களில் ஒன்றாக பார்க்கப்பட வேண்டும். வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் கனிவானவர்களாகவும், கரிசனையுள்ளவர்களாகவும் இருந்திடவேண்டும். அவர்கள் ஒருவரோடொருவர் அன்பாய்ப் பேசவும், ஒருவரையொருவர் சந்தோஷப்படுத்திட தங்களை தத்தம் செய்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

## முடிவுரை

தேவனுடைய பாதை மகிழ்ச்சியை வருவிக்கும்! அவரது வழிமுறைகள், திருமணத்தில் பாலியல் உறவுமுறை உட்பட வாழ்வின் அனைத்து விஷயங்களிலும் மனநிறைவைக் கொண்டு வரும். ஒரு தம்பதியினர் வேதாகமம் பாலுறவைப்பற்றி என்ன போதிக்கிறதென்பதை புரிந்து கொள்ளவும், அதன் போதனைகளை கடைப்பிடிக்கவும் முயற்சி செய்வார்களேயானால், அவர்களது தாம்பத்திய உறவு திருப்திகரமாயிருக்கும்.

தேவனுடைய விதிமுறைக்கு கீழ்ப்படிவது நமக்கு மகிழ்வையும் மன நிறைவையும் எவ்விதம் கொண்டுவருகிறது என்பதை நாம் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் அவைகளுக்கு நாம் கீழ்ப்படிந்தாக வேண்டும்! தேவன், இன்னும் தேவனாகவே இருக்கிறார், அவரைப் பிரியப்படுத்துவதற்கு அவரது சித்தம் செய்திடவேண்டும். இது வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் உண்மையாயிருப்பதைப் போலவே, மணவாழ்க்கை மற்றும் மணவாழ்வின் தாம்பத்திய உறவிலும் இது உண்மையாயிருக்கிறது!

---

குறிப்புகள்

[1]சாலொமோனின் உன்னதபாட்டில் வரும் காதலர் இருவருமே ஒருவரது தோற்றத்தை மற்றவர் புகழ்ந்து போற்றுகின்றனர். (அவன் அவளை பின்வரும் வசனங்களில் வருணிக்கிறான்: 1:10, 15, 16; 2:14; 4:1-7, 9-15; 6:4-9; 7:1-9; அவளும் அவனை பின்வரும் வசனங்களில் வருணிக்கிறாள் 2:3, 4, 8, 9; 5:10-16.) இருவருமே, ஒருவர் மற்றவரது வரவிற்காக ஏங்குகின்றனர் (3:1-4), தாங்கள் ஒருவரையொருவர் எவ்வளவாய் நேசிக்கிறோம் (4:10; 7:10), ஒருவரையொருவர்

*முத்தமிடுவதைப் பற்றியும், கட்டித் தழுவுவதைப் பற்றியும் பேசுகிறார்கள் (1:2; 2:6; 7:6-13).* [2]*உதாரணத்திற்கு, உணவின்மீது விருப்பம்கொள்வது நல்லதுதான், ஆனால் அது முறைதவறும்போது பெருந்தீனிப் பழக்கத்திற்கு வழிவகுத்துவிடும். அதுபோலவே தன்னிறைவை விரும்புவதில் தவறேதுமில்லை, ஆனால் இன்னொருவரது நல்வாழ்வைக் கெடுத்து அதன் மூலம் தன்னிறைவை அடைய நாடுவது தவறாயிருக்கிறது.* [3]*இந்தப் பாவங்களைப்பற்றி தடை உத்தரவினை, உதாரணத்திற்கு, லேவியராகமம் 20:10-17ல் காணவும்.* [4]*எடுத்துக்காட்டாக, எபேசியர் 5:3; 1 தெசலோனிக்கேயர் 4:3ஐ பார்க்கவும். போர்னியா என்கிற கிரேக்க பதமானது, "அனைத்து வகையான தகாத உடலுறவிற்கும்" பயன்படுத்தப்பட்டுள்ளது.* (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature, 3*d ed., rev. and ed. Frederick William Danker [Chicago: University of Chicago Press, 2000], 854.) [5]*வேசித்தனம் என்பது, விவாகரத்திற்கான ஒரே ஒரு நியாயமான காரணமாகவும் இருக்கிறது; மத்தேயு 5:32; 19:9 காண்க.* [6]*ஒருவர் விபச்சாரம் செய்துவிடும்படி தூண்டப்படும் சில சமயங்களில், யோசேப்பின் முன்மாதிரியைப் பின்பற்றி, எது அந்த சோதனைக்கு மூலகாரணமாயிருக்கிறதோ அதை விட்டு விலகி ஓடி விடுவதுதான் மிகச் சிறந்த வழியாகும் (ஆதியாகமம் 39:12).* [7]*யாராவது ஒருவர் விபச்சாரம் செய்கையில், "குற்றமற்றவரான" அவரது வாழ்க்கை துணை முற்றிலும் குற்றமற்றவர் என கூறி விடவும் இயலாது, மாறாக அவர், தவறிழைத்துப்போன தனது வாழ்க்கைத்துணையின் பாலுறவுத் தேவைகளை திருப்திபடுத்துவதற்கு ஒருவேளை மறுத்திருக்கலாம் அல்லது அதைக் குறித்து கவலைப்படாதவராக இருந்திருக்கலாமே. ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்த உண்மையென்னவென்றால், திருமண பந்தத்திற்கு வெளியே உள்ள வேறே தொடர்புகள் "பொதுவாகவே, மிதமிஞ்சிய பாலியல் வேட்கையால் உருவாவதில்லை. மாறாக கவனிப்பு, பாசம் ஆகியவற்றிற்காய் அளவில்லாமல் ஏங்குவதினால்தான் இது உருவாகிறது. பார்க்கப்போனால், இதில் தேவைப்படுவதெல்லாம் தனிப்பட்ட மனதிருப்திதானே ஒழிய பாலுறவு திருப்தியாயிருக்காது. முழு கவனிப்பையும் அன்பையும் பொழிகின்ற யாரோ ஒருவரது அரவணைப்பிற்கான ஆவல்தான் இது"* (Jim Hawkins, *Tarnished Rings* [Shippensburg, Pa.: Treasure House, 1993], 145). *எதைக் காரணமாகக் காட்டினாலும், விபச்சாரம் என்பது பாவமே.*